# சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த முடிவு

**சென்னை, ஜூன் 7:** சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் பெண்ணிடம் நகை பறிக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, ரயில் நிலையத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்த கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்படவுள்ளன. இதற்காக ஆரம்ப கட்டப்பணிகள் தொடங்கின.

சென்னை விருகம்பாக்கத்தைச் சேர்ந்தவர் சந்திரசேகர். இவரது மனைவி சந்திரா(65). அமெரிக்காவில் குடியுரிமை பெற்ற இவர்கள், கோயம்புத்தூரில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு, சதாப்தி விரைவு ரயிலில் கடந்த திங்கள்கிழமை இரவு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்துக்கு வந்தனர். அங்கிருந்து விருகம்பாக்கம் செல்ல சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்துக்கு வந்து, டிக்கெட் கவுன்ட்டர் அருகே நின்று கொண்டிருந்தனர். அப்போது, அடையாளம் தெரியாத நபர், சந்திராவின் கழுத்தில் அணிந்திருந்த ஆறரை சவரன் நகையைப் பறித்துச் சென்றார்.

இது குறித்து பெரியமேடு போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்தபோது, கண்காணிப்பு கேமராவில் சரியாக பதிவாகவில்லை என்பது தெரியவந்தது. இதையடுத்து, மெட்ரோ ரயில் நிலையங்களில் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கையில் மெட்ரோ ரயில் நிறுவனம் தீவிரமாக இறங்கியுள்ளது. அதிக கண்காணிப்பு கேமராக்கள் நிறுவ முடிவு செய்துள்ளது.

சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் மிகப்பெரிய சுரங்க போக்குவரத்து மையமாக உள்ளது. இங்கு தற்போது சுமார் 80 கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. மேலும் கூடுதல் கேமராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் 150 கேமராக்கள் வரை அதிகரிக்கப்படவுள்ளன. இந்த கேமராக்கள் 15 நாள்களில் பொருத்தப்படும். இதுதவிர, வண்ணாரப்பேட்டை - டிஎம்எஸ் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு இடையே புதிய நிலையங்களில் கேமராக்கள் எண்ணிக்கை அதிகப்படுத்தும் முயற்சி தொடங்கியுள்ளது. இந்த நிலையங்களில் மொத்தம் 200 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படவுள்ளன. இதுதவிர, பயணிகள் பாதுகாப்புக்காக பாதுகாவலர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், பாதுகாப்பைப் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.